Y.M.C.A

## ஆஸ்பத்திரி ஊழியரல்லாதவருக்கும் மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் தற்பொழுது ஊழியர் அல்லாதவர்களுக்கும் வழங்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. தொலைபேசி பரிவர்த்தனைப் பிரிவைச் சேர்ந்த ஆறு பேருக்கும் இலங்கை மின்சாரசபையைச் சேர்ந்த எட்டுப் பேருக்கும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். —04 ஆம் பக்கம் பார்க்க

## நோயாளர் வண்டியை தள்ளவேண்டாம் செஞ்சிலுவைத் தொண்டருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சிற்றூழியர்கள் இல்லாத நேரங்களில் நோயாளிகளை தள்ளுவண்டிகளில் கொண்டு செல்வது யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களின் பணியாக இருந்து வந்தது. ஆனால் புதிய நிர்வாகம் பொறுப்பேற்றதை படுத்து அங்குள்ள செஞ்சிலுவை மேற்பார்வையாளர் நோயாளர் வண்டியை தள்ளவேண்டாமென தொண்டர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு  விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 136 பிரமோதூத பங்குனி 29 ( 12-04-1991 ) வெள்ளி

★ இராணுவத்தினர்நிலைகொண்ட

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கும் இரண்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஊர்காவற்றுறை வைத்தியசாலையைத்திருத்த 2 லட்ச ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் பல வைத்தியசாலைகள் திருத்த வேலை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும் இந்த வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடும் கிடைத்துள்ளது. எனினும் கிடைத்த இந்த நிதியை பயன்படுத்த முடியாத நிலையில் யாழ் சுகாதார திணைக்களம் உள்ளது. ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் தற்போது இராணுவம் நிலைகொண்டுள்ளது குறிப்பிடதக்கது. (74)

# காரைநகரில் பீரங்கிப் படகுகள்

# இரவு கடுமையான தாக்கு

### விடுதலைப் புலிகள் எதிர்த்துச் சமர்

கடந்த சில தினங்களாக காரைநகரில் விமானத்தாக்குதல் நடைபெற்றதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு திடீரென கடற்படையின் பீரங்கிப்படகுகள் கடும் தாக்குதலை நடாத்தின,

நேற்று முன்தினம் இரவு 9 மணி தொடக்கம் காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் மேற்குத்திசை கடற் பகுதியிலிருந்தும் குடிமனைப் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல், கலிபர், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

படையினரின் தாக்குதல் வேகம் இரவிரவாகத் தொடர்ந்ததையடுத்து புலிகளும் பதில் தாக்குதலை நடாத்தினர்.

இதனால் கடற்படை முகாமின் சில கட்டிடத் தொகுதிகள் சேதமடைந்ததுடன் சில —04 ஆம் பக்கம் பார்க்க

# இராணுவம் முன்னேறும் முயற்சி கீரிமலைப்பகுதியில் முறியடிப்பு

நேற்றுக்காலை 9. 15 மணியளவில் கீரிமலையில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வலித்தூண்டல் பக்கமாக முன்னேற முயன்றபோது அவர்களை எதிர்த்து விடுதலைப்புலிகள் பெரும் தாக்குதலைத் தொடுத்தனர்.

இம்மோதல் சுமார் 15, 20 நிமிட நேரம் நீடித்தது தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் முகாம் திரும்பி அங்கிருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவை கருகம்பனை வசந்தபுரம் சேந்தான்குளம் பகுதிகளில்வீழ்ந்து வெடித்தன (48)

# மாந்தை, நானாட்டான் பகுதியில் இராணுவம் - புலிகள் மோதல்

### இன்று அஞ்சலி

காரைநகரில் வீரமரணமடைந்த குட்டி (செ. ராஜேந்திரன் நவக்கிரி), ரூபாசம் (நந்தவரதன் அராலி வடக்கு) ஆகியோரின் புகழுடல்கள் இன்று காலை நவக்கிரி குட்டி பாலர் பாடசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். (71)

### மாணவருக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

வலி வடக்குப்பகுதி பாடசாலைகளில் கபொத உயர்தரம் 1990ஆம் ஆண்டுக்கான பரீட்சைக்குத்தோற்றும்மாணவர்களுக்கு தலா ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் 40 ரூபாப்படி வழங்கப்பட்டுள்ளது. (48)

### பூநகரியில் சைக்கிள் திருட்டு

பூநகரி, வாடியடி சந்தைப் பகுதியில் அடிக்கடி சைக்கிள்கள் திருடப்படுகின்றன.

சைக்கிள் வியாபாரிகள் தமது சைக்கிள்களை விட்டு

### ஊரடங்கு நீக்கம்

வவுனியா மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை 10 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்களின் அருகிலிருந்து

## இடம்பெயர்ந்தவர்களுக்கு சுழற்சி முறையில் நிவாரணம்

இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண உதவிகளை சுழற்சி முறையில் இராம சேவைப்பிரிவு ரீதியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. — 04ஆம் பக்கம் பார்க்க

## அத்தியாவசிய மருந்துகளுக்கு மன்னார்த்தீவிலும் தட்டுப்பாடு

மன்னார் தீவகப்பகுதிகளில் குழந்தைகளுக்கான பால்மா வகைகள், அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு தற்போது பெருந்தட்டுப்பாடு நிலவுகிறதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர். மன்னார் அரசினர் வைத்தியசாலைகளிலும் டாக்டர்கள் ஊழியர்களுக்கு பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவு —04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் வங்கி ஊழியர்கள் பலர் தெற்கில் தற்காலிக வேலை

கடந்த ஜூன் மாதகால இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து கொழும்பு சென்ற வங்கி ஊழியர்கள் இன்னமும் திரும்பி வரவில்லையென வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் தென் பகுதி வங்கிகளில் தற்காலிகமாக கடமையாற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —04 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் ஊழியர்கள் தெற்கிற்கு இடமாற்றம்

# இராணுவம் - புலிகள் மோதல்

நேற்று முன்தினம் நண்பகல் மன்னார் மாந்தைப் பகுதியில் இருந்த படையினர் பரவலாக முன்னேறியபோது படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்றது.

இரு பொம்மர்கள், அவ்ரோ, ஹெலி ஆகியவை தாக்குதல் நடாத்த மூன்று பவள் கவசவாகனம், இரு ஆர்மட் கார்கள், இரு லொறிகள் சகிதம் படையினர் மாந்தையில் இருந்து பரவலாக முன்னேறினர்.

இந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது 2ம் லெப். துரைக்குட்டி, நாயகன், விஜயன் ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

சைக்கிள் வியாபாரிகள் தமது சைக்கிள்களை விட்டு விட்டு இரவு நித்திரை செய்யும் போது திருடப்படுகின்றன.

நேற்றும் பூநகரி செட்டியகுறிச்சியை சேர்ந்த ஒருவரின் புதிய சைக்கிள் திருடப்பட்டுள்ளது. (ப 35)

# தெற்கிற்கு இடமாற்றம்

லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் பணிபுரியும் ஊழியர்கள் சிலர் கட்டம் கட்டமாக கொழும்பு தலைமையகத்திற்கு இடமாற்றப் பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே பத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் தெற்கிற்கு இடமாற்றப் பட்டு விட்டனர். மற்று மொரு தொகுதியினருக்கும் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது. (74

# வவுனியாவில் பயணிகள் மீது சூடு
# இருவர் பலி; இருவர் காயம்

கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி வந்த பயணிகள் மீது வவுனியாவில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் இருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதாகவும், இருவர் படுகாயமடைந்ததாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை காயமடைந்த இருவரும் அனுராதபுரம்

—04 ஆம் பக்கம் பார்க்க

# வவுனியா அகதிகள் மீண்டும் இருப்பிடம் திரும்பினர்

கடந்த வாரம் வவுனியா நகரின் மேற்குப் பகுதியில் நடைபெற்ற மோதல்கள் ஓய்ந்ததையடுத்து அப்பகுதிக்கு மீண்டும் மக்கள் செல்லத் தொடங்கியுள்ளனர்.

பூவரசங்குளம், பாவற்குளம், சூடுவைத்த புலவு, பம்பைமடு ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்களே மீண்டும் தம் இருப்பிடங்களுக்கு

— 04 ஆம்பக்கம் பார்க்க

# பெரியகடைப்பகுதியில் மக்கள் கூட்டம் அதிகரிப்பு

யாழ் நகரில் புதுவருடத்தை முன்னிட்டு பெரியகடைப்பகுதி கடந்த இரு நாள்களாக வழமையிலும் பார்க்க பொதுமக்கள் நிறைந்து காணப்பட்டனர்.

அதிகமாக பெண்கள், குழந்தைகள் புதுவருடத்துக்கு உடுபுடவைகள் வாங்குவதை காணமுடிந்தது.

தூர இடங்களில் இருந்து வந்தவர்கள் நகரின் விமானத் தாக்குதல் இடிபாடுகளைப் புதுமையாகப் பார்த்ததையும் அவதானிக்கமுடிந்தது. (33)

# திருமலையில் இரு வாரங்களில் 200 தமிழரைக் காணவில்லை

திருமலை தமிழ் கிராமம் பலவற்றில் கடந்த இருவாரங்களில் மட்டும் 200க்கும் அதிகமான தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும்தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமலை நகரை அண்டியுள்ள அன்பு வழிபுரம், பாலியூற்று, செல்வநாயகபுரம்

—04 ஆம் பக்கம் பார்க்க

# அகதிகளை விடுவிக்குமாறு அரசிடம் ஐ. நா. கோரிக்கை

ஐ. நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலய பொறுப்பில் இருந்த மன்னார்த்தீவு, பேசாலை அகதிமுகாமை முன் அனுமதி எதுவுமின்றி சுற்றிவளைத்து அங்கு தஞ்சமடைந்திருந்தவரைக் கைது செய்ததன் மூலம் ஸ்ரீலங்கா அரசு ஐ. நா. சபையையே அவமதித்துள்ளதாக ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்த அகதி முகாமில் இருந்து கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் ஐ நா. உயர்ஸ்தானிக

—04 ஆம் பக்கம் பார்க்க

# அன்னை பூபதி பரீட்சை பதினேழாயிரம் மாணவர் பங்கு

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப்பரீட்சை இன்று தமிழீழம் முழுவதும் நடைபெறுகின்றது. இந்தப் பரீட்சை இதுவரை காலமும் தொடர்ந்து வரும் பொது அறிவுப் பரீட்சைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக

—04 ஆம் பக்கம் பார்க்க

# சவுதியிலுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தத்தம் குல தெய்வங்களை வழிபடத்தடை!

சவுதி அரேபியாவில் கடமைபுரியும் பிற நாட்டுத் தொழிலாளர்கள் அவர்களது மதங்களைப் பின் பற்றவோ, தமது குலதெய்வங்களின் படங்களை வைத்து வழிபடவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

'சவுதி அந்நிய தொழிலாளர்களை வரவேற்கிறது. ஆனால் அவர்களது மதங்களைத் தடை செய்கிறது' என அங்கிருந்து திரும்பிய தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சவுதியில் விமான நிலையத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கொண்டுவரும் புனிதசிலைகள் பறிமுதல் செய்யப்பட்டு குப்பைத் தொட்டிகளில் வீசப்படுகின்றன.

பிறநாட்டவர் தம் இருப்பிடங்களில் வைத்து வணங்கும் சமயப்படங்கள் பரிசோதனைக்கு வருவோரால் கிழிக்கப்படுகின்றன.

இதனால் சவுதியில் உள்ள இலங்கையர் உட்பட பிறநாட்டுத் தொழிலாளர்கள் ஆன்ம வாழ்வுக்கு வழியின்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வளைகுடாப் போர் நடந்து கொண்டிருந்த வேளையில் அங்கு தங்கியிருந்த 60 நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் போரின் அச்சத்துடன் வாழ்ந்த போது கூட அவர்கள் தெய்வவழிபாடு செய்ய அனுமதிக்கப்படவில்லை என அங்கிருந்து வந்த தொழிலாளர்கள் தெரிவிக்கிறார்கள். (16)

## 101 வயதிலும் கல்விகற்க டியூட்டரி செல்லும் தாத்தா

கல்வி கற்பதற்கு வயதெல்லையே கிடையாது என்பதைச் செயலில் நிரூபித்துள்ளார் கொரியாத்தாத்தா ஒருவர்.

அவருக்கு இப்போது வயது 101. இறந்துவிடுவதற்கு முன்னர் ஆங்கிலம் கற்று விடவேண்டுமென்ற ஆவலில் தற்போது இளமும் தள்ளாடும் வயதிலும் தனது பூட்டனின் உதவியுடன் ரியூசன் படிக்கச்சென்று வருகிறார் இத் தாத்தா.

கொரியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சாங்மூன் என்னும் இவர் தற்பொழுது கனடாவில் வசித்துவருகிறார். இவர் கனடாவிலுள்ள வினிபெக் நகரின் கல்விநிலையமொன்றில் வாரத்தில் மூன்று நாட்கள் இரண்டுமணி நேரம் ஆங்கிலம் கற்கிறார்

கல்வி நிலையத்தில் பணிபுரியும் ஆசிரியை மிஸ். பான்ஸ் தனது மாணவன் சங்மூனை அக்கறையோடு கவனித்துக்கொள்ளத் தவறுவதில்லையாம்.

## சிறுவர்களுக்கும் தலைக்கவசம் இனிக் கட்டாயமாகிறது

மோட்டார் சைக்கிள்களில் பின்னால் அமர்ந்து செல்லும் சிறுவர்களும் இனித் தலைக்கவசம் அணிதல் வேண்டுமெனப் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இச் சட்டம் அமுலாக்கப்படவுள்ளது.

தர நிர்ணயத்துக்கு ஏற்ற, பொருத்தமான அளவு சிறுவர்களுக்கான தலைக்கவசங்களை வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதற்கு சந்தர்ப்பமளிக்கும் வகையிலேயே இக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

## பலாலியிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்க அ. அதிபரிடம் கோரிக்கை

பலாலியிலிருந்து இராணுவக் கெடுபிடிகளால் வெளியேறிய 2050 குடும்பங்கள் விடயத்தில் உடன் நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

● இது தொடர்பாக இக் கழகம் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் உள்ள பிரதான கோரிக்கைகளில் சில:

இவர்களுக்கு ஆகக்குறைந்தது ஒரு கிழமைக்கோ அல்லது இருவாரத்திற்கு ஒருமுறையாவது உலர் உணவு வழங்கப்படவேண்டும்.

● இவர்களின் உணவு முத்திரைகள் 7 ஆம் புள்ளிக்குரிய கொடுப்பனவுகளுக்குப் பிறகு இன்னமும் புள்ளிகள் வெட்டப்படவில்லை. அதற்குரிய கொடுப்பனவுகள் நடைபெறவில்லை. ஆகவே மீதியாகவுள்ள 5 புள்ளிகளுக்கும் உரிய கொடுப்பனவுகளை மிகவும் சீக்கிரமாகவும் அதற்குரிய பொருள்களின் விலையை மொத்த விலைக்கு அமைய கொடுக்கப்பட வேண்டும்.

● இவர்கள் தற்போது தங்கியிருக்கும் பகுதிகளில் நிவாரண சம்பந்தமாக கொடுப்பனவுகளில் முதலிடம் அளிக்கப்படவேண்டும்.

● இவர்களில் சில குழந்தைப் பிள்ளையுள்ள குடும்பங்களுக்கு உணவு முத்திரை (குழந்தைகளுக்குரிய) கொடுக்கப்பட வேண்டும்.

15. 06. 90 இல் இருந்து இன்று வரைக்கும் 10 தடவைகள் மட்டும்தான் உலர் உணவு கிடைக்கப் பெற்றதையும் இங்கு குறிப்பிடுகின்றோம். இதைத்தவிர எங்களுக்கு அரசாங்கமோ அல்லது பொது நிறுவனங்களோ இன்றுவரைக்கும் எதுவித உதவியையும் செய்யவில்லை. ஆகவே மேற்குறிப்பிட்ட விடயத்தை பரிசீலனை செய்து மிக விரைவாக நிவர்த்தி செய்யுமாறு பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் கேட்கப்படுகிறது. அத்துடன் இதன் முடிவை மிகவும் சீக்கிரமாக எங்களுக்கு அறியத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## சிறுவர்கள் சிரமதானம்

அச்சுவேலி புனித சூசையப்பர் கோவிலைச் சேர்ந்த 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சிரமதானம் மூலம் அப்பகுதி ஒழுங்கைகள், வீதிமருங்குகள் என்பவற்றை துப்புரவு செய்து வருகின்றனர்.

இவர்கள் 1980 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதான கேணியொன்றையும் சிரமதான மூலம் திருத்தி அமைத்துள்ளனர்.

## புதன் கிழமைகளில் மூடப்படும்

சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் இம் மாதம் 17 ஆம் திகதி முதல் இனிமேல் புதன்கிழமைகளில் மூடப்படும் என வடஈழம் சிகை அலங்கரிப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இக்கட்டுப்பாட்டுக்கு அமையாத நிலையங்களுக்கு 250 ரூபா அபராதம் விதிக்கப்படுவதுடன் ஏழு தினங்களுக்கு குறித்த நிலையத்தை திறப்பதற்கும் தடை விதிக்கப்படுமெனவும் சங்கம் அறிவித்துள்ளது.

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டை ராச வீதிக்கும் நல்லூருக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து 'முரசொலி' அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானமுண்டு. ரட்ணம் விமலாதேவி பொலிகண்டி வேரவில். 04070

### சேவை

உங்கள் பெறுமதி மிக்க புத்தகங்கள் கொப்பிகள் மற்றும் உங்கள் தொகுப்புக்கள் அனைத்தும் மிக அழகான முறையில் (பைண்டிங்) கட்டிக் கொடுக்கப்படும். நூலகங்களுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் குறைந்த கூலியில் வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை, 255 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 04036

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| தளிராய்: | சருகாய்: |
| 01 | 12 |
| -- | -- |
| 06 | 04 |
| -- | -- |
| 1942 | 1989 |

## அரசாங்க அறிவித்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

இக்காரியாலயத்தில் பாவனைக்குதவாத பொருள்கள் 16 - 04 - 91 செவ்வாய்க்கிழமை மு. ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் இக்காரியாலயத்தில் விற்கப்படும். அப்பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் அன்று காலை 9.00 மணி முதல் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

1942 1989



## அமரர் க. செல்லத்துரை அவர்கள்

பீ. ஏ. கல்வி டிப், எம். ஏ. (கல்வி)

(முன்னாள் அதிபர், யாழ் / மீசாலை விக்னேஸ்வர ம. வி.)

புன் சிரிப்பைச் சிந்துகின்ற பூவதனம்
புல்லர்களின்
வன்னெஞ்சப் பாறைதனில் மோதி மறைந்ததுவோ!
தாயைவிற்றுத்தமிழை அழித்த எங்கள்
சதிகாரர் கொடுமை செய்தெம்
சேயை அழித்தனரே!
ஆண்டு இரண்டு போனாலும்
அழிந்திடுமோ உன் நினைவு
மீண்டுமொருபிறப்பெடுத்து மிஞ்சுபவை அழித்திடவா!

பழைய மாணவர்கள்

04046


கேட்டுக் கொள்கின்றோம்.

## 15 ஆம கட்டமும் ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தி லுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ப நோ. க. சங்கமங்கனி னூடாக 14 ஆம் கட்ட இலவச உலர் உணவு விநியோகமும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

15 ஆம் கட்ட இலவச உலர் உணவு விநியோகமும் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

14 ஆம் கட்ட விநியோகத் தின் போது இரட்டிப்புஉலர் உணவு விநியோகம் செய்யப் பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (ப-35)


சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

சு. சே. பி. ப: பணிமனை,
யாழ்ப்பாணம்.
10 - 4 - 91

04067



## ஜெசித்தாரா பல்பொருள் அங்காடி

உங்கள் இல்லத்தரசியின் மனை சிறக்க
தேவையான பொருட்களை வாங்கிச்செல்ல
ஒரு முறை நாடுங்கள்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிரில்
3A, கொழும்புத்துறைசாலை,சுண்டிக்குளி,

04024



## "தேவி" கிறைண்டிங் மில்

மிளகாய்த்தூள், வேறு ஏனைய மாப்பொருள்கள் அரைப்பதற்கு மின்சாரம் இன்றிக் கஷ்டப்படும் பொது மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு

நேரம்: தினமும் காலை 9.00 — மாலை 5.00 மணி வரை

செத்தல் அரைப்பதற்கு கிலோவிற்கு ரூபா 80,00. ஏனைய மா வகைகளுக்கு கிலோவிற்கு ரூபா 8 00 ஆகவும் அறவிடப்படும்.

இடம்: வதிரிச் சந்தியிலிருந்து திக்கம் வீதியில்

04059

# சகல அரச ஊழியர்களினதும் லீவுகள் ரத்து என அறிவிப்பு

மே மாதம் ஆறாம் திகதி முதல் பன்னிரண்டாம் திகதிவரை (இவ்விரு தினங்கள் உட்பட) மாகாணசேவை மற்றும் அரச சேவையிலுள்ள எந்தவொரு ஊழியருக்கும் லீவு வழங்கக்கூடாது எனப்பொதுநிருவாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களையும் பணித்துள்ளது.

மத்திய வங்கி ஊழியர்களுக்கும் இக்காலப்பகுதியில் லீவு வழங்கப்படமாட்டாது.

அத்துடன் இக்காலப்பகுதிக்கென ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகயீனம் போன்ற பிரத்தியேக சூழ்நிலையில் மட்டுமே இக் காலப் பகுதியில் லீவு வழங்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் தேசிய விளையாட்டாக கரபந்தாட்டம் பிரகடனம்

இலங்கையின் தேசிய விளையாட்டாகக் கரபந்தாட்டம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு இப் பிரகடனத்தைச் செய்துள்ளது.

இலங்கையின் தேசிய விளையாட்டை நிர்ணயிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழு செய்த சிபார்சுக்கமையவே இப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## ஆணையாளராக பதவியுயர்வு

மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய இன்னையா இராசையா மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவியுயர்த்தப்பட்டுள்ளார். (ப-35.

## சீமெந்து ஊழியர் கூட்டம்

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன சகல ஊழியர்களையும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியிலுள்ள குமாரசாமி மண்டபத்தில் நடைபெற இருக்கும்தொழிற்சாலை சம்பந்தமான கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி நிர்வாக முகாமையாளர் வை. த. சிவலிங்கம் கேட்டுள்ளார்.

## திருமலை மீது இந்தியாவுக்குக் கண்; எண்ணெய்குதத்தைக் கேட்கிறது

திருகோணமலையிலுள்ள பாரிய எண்ணெய்க்குதங்களை பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்குமாறு இந்தியா இலங்கை அரசைக்கோரியுள்ளது.

இதே போன்று மன்னார் கடலில் எண்ணெய்வள ஆய்வினை மேற்கொள்வதற்கும் இந்திய நிறுவன மொன்று இலங்கையரசின் அனுமதியைக் கோரியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

## பலாலிகலாசாலையில் கலந்துரையாடல்

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கலாசாலையின் விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் கலாசாலையின் அபிவிருத்தி குறித்த முக்கிய கலந்துரையாடலை இன்றுவெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்கொள்ள ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் கலாசாலைச்சுப்பிரமணியம்மண்டபத்தில் அதிபர் ஆர். எம். நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## கால்வாய் நோய்

யாழ் குடாநாட்டில் கால்நடைகளுக்குக் கால்வாய் போன்ற நோய்கள் பரவிவருகின்றன. அதைமாற்றமுடியாத நிலையால் இறைச்சிக்காக அவை மலிந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக மிருகவைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நோய்களுக்குக் கொழும்பிலிருந்து மருந்துகள் வராததால் கால்நடைச் சொந்தக்காரர்கள் அவற்றை விற்பதாகவும் தெரியவந்துள்ளது.

## தூத்துக்குடியிலிருந்தும் 'ஆய்போவன்' எதிர்வரும் டிசம்பர் முதல் ஒலிக்கும்

தமிழக கரையோரப் பகுதிவான தூத்துக்குடிப் பகுதியிலிருந்து இலங்கையிலுள்ள சிங்களவர்களுக்காக சிங்கள ஒலிபரப்பு ஒன்று நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென 200 கிலோவாற் அதிஉயர் சக்தியுடைய ஒலிபரப்பு நிலையமொன்று தற்பொழுது இந்திய அரசால் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. டிசம்பர் மாதம் முதல் இந்த நிலையத்திலிருந்து ஒலிபரப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அகில இந்திய வானொலி இந்த நிலையத்திலிருந்து சிங்கள ஒலிபரப்புடன் தமிழ், ஹிந்தி, ஆங்கில மொழிமூலமான ஒலிபரப்புக்களையும் வெளிநாட்டவர்களுக்கென ஒலிபரப்பவுள்ளது.

## கொழும்பில் சகல வசதிகளையுமுடைய புதிய தனியார் வைத்தியசாலை

கொழும்பு வெள்ளவத்தை காலி வீதியில் 'டெல்மன் வைத்தியசாலை" என்னும் பெயரில்புதிய தனியார் வைத்திய... யுமொன்று என வைத்தியசாலை இயக்குநர் டாக்டர் ஏ. விஜயராகவன் தெரிவித்துள்ளார்.

# கவிதைப் பட்டறை மீதொரு கண்ணோட்டம் - II

— வனமரா

காலைத் தேநீருக்குப் பிறகு பிரபலமான கவிஞர்கள் சிலர் பட்டறை மாணவருக்கு அறிமுகமாயினர். அவர்கள் தமது கவிதைப் படைப்பு அநுபவங்களைத் திறந்த மனதுடன் உரையாடினர்.

"உனக்கு ஒரு பொருளின் மீது அதீத விருப்பம் இருக்குமாயின் அப்பொருள் இலகுவில் கிடைத்துவிடும். கவிதை என்பதும் அப்படியே. அது நுணுக்கம் நிரம்பியதாக இருப்பினும், அதைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் உன்னிடம் இருந்தால், அது இலகுவில் கைவந்து விடும்"

என்று ஆரம்பித்தார்கவிஞர் வே. குமாரசாமி. "நான் பாடசாலையில் படிக்கும் சிறுவனாக இருந்தபோது, வகுப்பில் எனக்குப் பக்கத்தில் இருந்த நண்பனுக்கு ஆசிரியர் அடித்து விட்டார். இறுக்கமான அடி, என்னால் (எனக்கு அடிவிழாத போதும்) அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை."

மூண்டு மயிர்க் குடும்மி வாத்தி
முதுகு வெடிக்க அடிப்பன்
வீட்டை போவம்
தோட்டம் செய்வம்.........?

என்று சிலேட்டில் எழுதி வைத்த வரிகளோடு ஆரம்பித்தது என் கவிதை உலகு.

மனதைப் பாதிக்கிற விடயங்களை, அநுபவங்களை, ஒருவருக்கும் சொல்லாமல் கொண்டு திரிய......அது பாட்டாகவரும்என்று தொடர்ந்த அவர் தனது குழந்தைப் பாடல் அநுபவங்களையும் சுவாரசியமாகச் சொன்னார். பாடல்கள் குழந்தைகளுக்கு ஒரு போதும் சுமையாக இருக்கக் கூடாது என்றும் குழந்தையின் சொற் களஞ்சியத்தைக் கவிஞர் அறிந்திருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் கைலாசபதி அவர்களின் ஆலோசனைகள் தனது 'பாப்பாப்பா' தொகுதிக்குக்கனதிகொடுத்த விபரங்களையும் அவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள் தமது கல்லூரி வாழ்வில் கவிஞர் கதிரேசர்பிள்ளை கொடுத்த ஆதரவையும், உற்சாகத்தையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தான் 'மாங்கனி' பற்றி ஒரு கவிதை எழுதப் போய் அங்கு படித்த பெண் ஒருத்திக்கு மாங்கனி என்று பட்டப் பெயர் இருந்து விட்டதால் தாம் பட்ட அவஸ்தையைச் சுவைபட விபரித்தார்.

கவிதை ஊற்றெடுக்கும் உள்ளத்தில் பொறாமை தோன்றுவதில்லை என்ற கவிஞரின் கூற்று சிந்திக்கும்படிஅமைந்தது எனலாம். பட்டறை மாணவர் உணர்வுடன் வாசித்துப் பழக ஒரு கவிதை சொல்லும்படி அவரிடம் கேட்கப்பட்டபோது' சூரியன் பற்றித் தான் எழுதிய,

"வானத்தே நின்று பொன் அம்பினாலே
வையத்தின் இருள் கடியும் வீரன்
தானோ"?

என்று முடியும் கவிதை ஒன்றை அவர் தந்தார்.

மாடி மனைகளைக் கட்டிவென்ன தினம்
மண்ணையும் விண்ணையும் ஆய்ந்து
மென்ன?
கூடி இருக்கவழி அறியார் - கொல்லும்
குண்டுகள் கண்டதே மிச்சமடா

மாலை நிகழ்வின் அச்சாணி கவிஞர். சோ பத்மநாதன் அவர்களின் 'மரபுக்கவிதை' ஆக்கம் பற்றிய உரை

"கவிதை ஒரு செப்பமான வடிவம் எண்ணங்களை ஒழுங்கு படுத்திக் கலாபூர்வமாகச் செய்வப்படுவது. உரை நடையில் காணப்படக் கூடிய வளவளாத் தன்மைக்குக் கவிதையில் இடம் இல்லை"

என்று கம்பீரமாகத் தொடங்கினார் அவர். மனிதனிடம் காணப்படும் பல பிறப்புத்தெறிவினைகளில் முக்கியமானவை இரண்டு என்று அரிஸ்ரோற்றில் குறிப்பிடுவார்; அவை,

1. போலச் செய்தல்
2. தனதுசெயல்களில் ஒரு லயத்தைத் தேடுதல்.

இவற்றில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட பிறப்புத் தெறிவினையின் ஒரு வெளிப்பாடே கவிதை என்றார்.

நல்ல கவிதை என்பது "The arrangement of the best words in the best order" என்று சொல்லப்பட்டபோதும் இந்தச் சொற்களுக்கும், ஒழுங்குக்கும் அப்பால் கவிதை பல பரிமாணங்களைக் கொண்டது.

கவிதையில் பயன்படும் மொழி எமக்குப் பல தகவல்களைத் தருகிறது. ஒரு படைப்பாளியின் அநுபவத்தைப் பலர் பகிர்ந்து கொள்ளக்கூடியதாய் இருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் கவிதை தரும் உணர்வு முக்கியமானது.

வெள்ளொளியில் காணப்படும் ஏழு நிறங்கள் பற்றிய தகவலை நியூற்றன் சொன்னார். ஆனால் வானவில் ஒன்று வானத்தில் தோன்றுகையில் ஏற்படும் மகிழ்வை ("My heart leaps when I behold A rainbow in the sky") என Words worth அழகாகச் சொன்னார்.

எளிமையான சொற்கள் கூட ஆற்றல் மிக்க கவிஞனின் கையில் மிகுந்த வலுவைப் பெற்றுவிடுகின்றன. சொற்கள் புதிய புதிய பொருளைத் தருகின்றன. இதனால் கவிதை சொல்லும் சேதியை விட சொல்லாத சேதிகளே முக்கியமாகி விடுகின்றன.

பாரி இறந்தபோது கபிலர் ஒரு கவிதை செய்தார். அது மாரியைப் புகழ்வது போல் இருந்தது பாரியை மிக அதிகமாகப் புகழ்வது சொல்லாத சேதியாயிற்று.

ஆய்ச்சியொருத்தியிடம் மோர் வாங்கிக் குடித்தவன் "தண்ணீரே நீ முகிலாக மேலே இருந்தாய். பிறகு மழையாகப் பெய்திராய். இப்போது இந்தப் பெண் கையில் மோராக மாறி விட்டாய்" என்று பாடினான். மோரில் அதிகளவு நீர் கலக்கப்பட்டது என்பது சொல்லாத சேதி!

நல்ல கவிதையை உருவாக்கச் சில கருவிகள் பயன் படும்.

பாட்டு, இசை, கூத்து மூன்றுமே ஒரு காலத்தில் ஒன்றாக இருந்து, ஒன்றாக வளர்ந்தவை. பாட்டுக்கு ஓசை மிக அவசியமானது. "ஓசை தரும் இன்பம் உவமை இலா இன்பமன்றோ?" என்று பாரதி கேட்பான். சத்தியசீலனின் குழந்தைக் கவிதைகள் பல வெற்றி பெற்றமைக்கு அவர் கொண்டு வருகிற ஓசை முக்கியமாய் இருந்திருக்கிறது.

("வன்றியாரை வென்றுவிட்ட பாட்டி" யைப் பாடுகிறார்)

1, ஓசை

ஒலிபரப்பு நிலையமொன்று தற்பொழுது இந்திய அரசால் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. டிசம்பர் மாதம் முதல் இந்த நிலையத்திலிருந்து ஒலிபரப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அகில இந்திய வானொலி இந்த நிலையத்திலிருந்து இங்கு கள ஒலிபரப்புடன் தமிழ், ஹிந்தி, ஆங்கில மொழிமூலமான ஒலிபரப்புக்களையும் வெளிநாட்டவர்களுக்கென ஒலிபரப்பவுள்ளது.

## கொழும்பில் சகல வசதிகளையுமுடைய புதிய தனியார் வைத்தியசாலை

கொழும்பு வெள்ளவத்தை காலி வீதியில் 'டெல்மன் வைத்தியசாலை' என்னும் பெயரில்புதிய தனியார் வைத்தியசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நவீன வைத்திய வசதிகளைக் கொண்ட இவ்வைத்தியசாலை 8 மாடிகளையும் 160 படுக்கை வசதிகளையும் தனித்தனி அறைகளில் தொலைக்காட்சி, தொலைபேசி வசதிகளையும் கொண்டது.

விபத்து, அவசரகாலப்பிரிவுகளுடன் 24 மணி நேரமும் இயங்கும் இவ்வைத்தியசாலையில் விரும்பிய வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறக்கூடிய வசதியுமுண்டு என வைத்தியசாலை இயக்குநர் டாக்டர் ஏ. விஜயராகவன் தெரிவித்துள்ளார்.

## மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

அண்மையில் வெளியான க. பொ. த. சாதாரணதர பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் மேமாதம் 10 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட இப்பரீட்சை வடக்கு கிழக்கில் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெறவுள்ளது.

## கால்வாய் நோய்

யாழ் குடாநாட்டில் கால்நடைகளுக்குக் கால்வாய் போன்ற நோய்கள் பரவிவருகின்றன. அதைமாற்றமுடியாத நிலையால் இறைச்சிக்காக அவை மலிந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக மிருகவைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நோய்களுக்குக் கொழும்பிலிருந்து மருந்துகள் வராததால் கால்நடைச் சொந்தக்காரர்கள் அவற்றை விற்பதாகவும் தெரியவந்துள்ளது.

## துணி ஆலை இடிந்து விழுந்து டாக்காவில் 50 பேர் மரணம்

பங்களா தேசத்தில் டாக்கா அருகே தொழிற்சாலையொன்று நேற்றுமுன்தினம் இடிந்து விழுந்ததில் 50 பேர் கொல்லப்பட்டார்கள். மேலும் 150 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி படுகாயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

புதிதாகக் கட்டப்பட்டு வரும் துணிஆலையொன்றே கடும் மழை காரணமாக இடிந்துவிழுந்து இவ்விபரீதம் நிகழ்ந்துள்ளது.

## மன்னார் ஆயர் தாக்குதல் குறித்து இலங்கைத் திருச்சபை மௌனம்

மன்னார் ஆயர் அதிவணக்க தோமஸ் சௌந்தரநாயகம் வவுனியாவில்வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கைத் திருச்சபை மௌனம் சாதிப்பது பற்றி தமிழ் கத்தோலிக்கர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஆயர் மன்றப் பேரவையும் இது குறித்து எதுவித கண்டனத்தையும் தெரிவிக்காமல் எதுவும் தெரியாதது போல் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, கண்டி, காலி, சிலாபம், அநுராதபுரம், குருநாகல், பதுளை, யாழ்ப்பாணம், திருமலை மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மறைமாவட்டங்களுக்கு ஆயர்கள் கடமை புரிகின்றனர்.

அதில் யாழ், மன்னார், மற்றும் திருமலை, மட்டுநகர் ஆகிய மூன்று தமிழ்ப்பகுதிகளில் மட்டுமே மூன்று தமிழ் ஆயர்கள் உள்ளனர். (33)

பொறாமை தோன்றுவதில்லை என்ற கவிஞரின் கூற்று ஒத்திக்கும்படி அமைந்தது எனலாம். பட்டறை மாணவர் உணர்வுடன் வாசித்தும் பழக ஒரு கவிதை சொல்லும்படி அவரிடம் கேட்கப்பட்டபோது' சூரியன் பற்றித் தான் எழுதிய,

"வானத்தே நின்று பொன் அம்பினாலே
வையத்தின் இருள் கடியும் வீரன்
தானோ"?

என்று முடியும் கவிதை ஒன்றை அவர் தந்தார்.

மாடி மனைகளைக் கட்டிவென்ன தினம்
மண்ணையும் விண்ணையும் ஆய்ந்து
மென்ன?
கூடி இருக்கவழி அறியார் - கொல்லும்
குண்டுகள் கண்டதே மிச்சமடா

என்ற கவிதையைப் பட்டறை மாணவருக்குத் தந்துமிக உற்சாகமாகவும் கலகலப்பாகவும் தன் படைப்பு அனுபவங்களை விளக்கினார் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை அவர்கள்.

தன்னை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து உற்சாகம் தந்தவர்களில் அ.செ.முவும் அழவள்ளியப்பாவும் குறிப்பிடத்தக்கவர்கள் என்றார் அவர்.

கவிஞர்களின் பாரம்பரியத் தொடர்பு தனக்கு இருப்பதையும் குறிப்பிட்ட அவர் ஒரு கவிஞரின் கவிதையில் இன்னொருவர் திருத்தம் செய்வது எப்படி அதன் அழகையும் ஆளுமையையும் மாற்றிவிடுகிறது என்பதைச்சுவையான அநுபவம் ஒன்றின் மூலம் வெளிக் கொணர்ந்தார்.

மாலை நிகழ்வு கவிதைகளை உணர்வு பூர்வமாக வாசித்தலுடன் தொடங்கியது. பாரதியாரின் கண்ணன் என் சேவகன்; சேரனின் இரண்டாவது சூரிய உதயம், சோ.ப.வின் பௌர்ணமி நாள், புலவர் ம. பார்வதி நாதசிவத்தின் பெண்ணின் பெருமை, கல்வயல் வே. குமாரசாமியின் இதயத் தந்தியில் மீட்டவோ? போன்ற பல கவிதைகளைப் பட்டறை மாணவர் உணர்வு பொங்க வாசித்தனர் சிவசேகரத்தின் வியா தெக்ரோ கிராமத்தில் ஹுவான் பாதிரியாரின் முதல் நாளும் இறுதி நாளும் என்ற கவிதை சிறிதவர்கள் வேண்டுதல் செய்யும் ஓசையுடனும், உணர்வுடனும் வாசிக்கப்பட்டமை ஒரு வித்தியாசமான பாணியாக அமைந்து சிறப்புப்பெற்றது.

களவு நீர் கலக்கப்பட்டது என்பது சொல்லாத சேதி!

நல்ல கவிதையை உருவாக்கச் சில கருவிகள் பயன்படும்.

பாட்டு, இசை, கூத்து மூன்றுமே ஒரு காலத்தில் ஒன்றாக இருந்து, ஒன்றாக வளர்ந்தவை. பாட்டுக்கு ஓசை மிக அவசியமானது. "ஓசை தரும் இன்பம் உவமை இலா இன்பமன்றோ?" என்று பாரதி கேட்பான். சத்தியசீலனின் குழந்தைக் கவிதைகள் பல வெற்றி பெற்றமைக்கு அவர் கொண்டு வருகிற ஓசை முக்கியமாய் இருந்திருக்கிறது.

("வன்றியாரை வென்றுவிட்ட பாட்டி" யைப் பாடுகிறார்)

1, ஓசை

"வானத்தில் இருக்கும்போது உனக்கு முகில் என்று பேர், கீழே இறங்கியதும் நீர் என்று பெயர் பெற்றாய்"

2 . உவமை

காலம் காலமாகக் கவிஞர்கள் கையாளும் உவமைகள் பல இருக்கின்றன. புதிய உவமைகள் சேரும்போது கவிதை சிறப்புப் பெறுகிறது. மஹாகவி, விடியலைக் கோப்பி கலந்த பாலுக்கும், தேரை நெற்குவியலுக்கும் ஒப்பிட்டு வெற்றிகண்டார்.

(3) உருவகம்

மரபுக் கவிதையின் சில போக்குகளை நிராகரிக்க எழுந்ததே புதுக்கவிதை இயக்கம். ஆனால் புதுக்கவிதை மரபுக்கவிதை பேணி வந்த உருவகத்தை ஒருபோதும் நிராகரிப்பதில்லை "அமெரிக்கக் கொக்கு அமர்வதற்கு இடந்தேடி குமரிக்கடலோரம் குறிவைத்துப் பார்க்கிறது" என்கிறார் புதுவை இரத்தினதுரை. வாடியிருந்து விட்டு வாய்ப்பு வந்ததும் கொத்தும் கொக்கு அமெரிக்கா.

—04 ஆம் பக்கம் பார்க்க

### திருத்தம்

நேற்றைய கண்ணோட்டம் - 1 இல் ஈற்றில் வந்த வரிகளைப் பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

"கருங்கல் இடிச்சு,
அக்கினி குடிச்சு,
பெருந்தெரு காத்துத்
தேடின காசு மோசனை"

# பருத்தித்துறையில் இரவு நேரம் கொள்ளை

# அண்மைக்காலமாக அதிகரித்துவருகிறது

பருத்தித்துறை நகரில் உ.ள ''பருத்தித்துறை சிவா மினி ஷொப்'' இரவு வேளையில் உடைக்கப்பட்டு சுமார் 10,000 ரூபா பெறுமதியான பாவனைப்பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கடையின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு கடைக்குள் இருந்த உணவுப்பொருள்கள் உட்பட பாவனைப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியிடம் புகார் செய்துள்ளார்.

பருத்தித்துறையில் அண்மையில் வெற்றிலைக்கேள் வேக்ஸ், அகிலன் கடைபார், சந்திரன் றொட்டிச்சாலை, என்பனவும் இரவு வேளையில் உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இக்கொள்ளைச் சம்பவங்களையடுத்து பருத்தித்துறைப்பகுதியில் இரவு நேரம் பொதுமக்கள் அச்சத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## உணவு முத்திரை அறிவுறுத்தல் நடைமுறைச் சாத்தியமாகாது

உணவு முத்திரைகள் பெறுவோரை இனங்காணுவது தொடர்பாக வறுமை நிவாரண ஆணையாளரின் 48ஆம் இலக்க 25-02-91 ஆம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது தற்போதைய சூழ் நிலையில் பொருத்தமற்றதாகும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் வடக்கு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்து, குடாநாட்டின் பல் வேறு பகுதிகளிலும் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்வதால், இவ்வாறு இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தங்கள் தங்கள் பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட பின்னரே இவ்வாறான மீளாய்வுகளைச் செய்வது பொருத்தமானதாக இருக்கும் என்ற கருத்து, இவ்விடயம் தொடர்பாக கிராம சேவை உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது. (47)

## பூம்புகார் பட்டினக் கடலில் அழிந்த நகரம் கண்டுபிடிப்பு

தமிழகத்தின் புராதன துறைமுகநகரான பூம்புகார் கடலில் பழமையான கப்பல் ஒன்றும் நகரம் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இக்கடலில் பழையநகர் குறித்து நடைபெற்ற கடல் அகழ்வாராய்ச்சியிலேயே இந்த மரத்திலான புராதன கப்பலும், அழிவடைந்த நகர் ஒன்றின் பகுதியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## விவசாயப் பாடசாலையை வவுனியாவுக்கு மாற்ற ஏற்பாடு

பாதுகாப்புக் காரணங்களுக்காக வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு மாற்றப்பட்ட விவசாயப்பாடசாலை மீண்டும் வவுனியாவுக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா விவசாயப் பாடசாலை அமைந்துள்ள பகுதியிலேயே தற்போது சண்டை நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. (33)

## பாவனைக்குதவாத பாண் விற்பனையாளருக்கு எச்சரிக்கை

பாவனைக்கு உதவாத முறையில் இருந்த எட்டு இறாத்தல் பாண் புங்குடுதீவு சுகாதார பரிசோதகரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புங்குடுதீவு பகுதிகளிலுள்ள கடைகளுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

பாண்களில் நிறை குறைவு, தரம் குறைவு, பூச்சி புழு வண்டுகள் போன்றவை பெருமளவில் காணப்பட்டதினால் அப்பாணை மக்களுக்கு விற்பனை செய்யக்கூடாது என வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு அங்கு விற்பனை செய்வதற்காக இருந்த எட்டு இறாத்தல் பாணும் எடுத்துச் செல்லப் பட்டது. (20

## லங்கா சீமெந்து ஊழியருக்கு பெப்ரவரி மாதச் சம்பளம் இல்லை

லங்கா சீமெந்து லிமிட்டெட் ஊழியர்களுக்கு பெப்ரவரி மாதச் சம்பளம் வழங்குவதானால் தற்காலிக வேலை நீக்கக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கொழும்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து ஊழியர்கள் சம்பளத்தையும், வேலை நீக்கக் கடிதத்தையும் பெற்றுக் கொள்ளாதிருந்தனர்.

புதுவருடத்துக்கு பணம் தேவைப்படுவதால் இந்த ஊழியர்கள் நேற்று முன்தினம் வேலை நீக்கக் கடிதத்தையும், பெப்ரவரி சம்பளத்தையும் பெற்றுக்கொள்ள பிரதி முகாமையாளரிடம் சென்றனர்.

ஆனால் அவர்களுக்கு சம்பளமும் கடிதமும் வழங்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார். (48)

## பம்பாய் வெங்காய விதை திருநெல்வேலியில் விற்பனை

திருநெல்வேலியில் உள்ள யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் விவசாயிகளுக்குத் தேவையான நம்பூர், தாம்பூர இன பம்பாய் வெங்காய விதைகள் விற்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

விதைகள் தேவைப்படுவோர் வேலை நாட்களில் அலுவலகத்தில்வந்து பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. கே. குணரத்தினம் தெரிவித்துளார் (33)

## முல்லைத்தீவு தபால்கள் எடுத்துவர நடவடிக்கை

வவுனியாவில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக தேங்கியிருக்கும் முல்லை மாவட்டத்துக்குரிய தபால் பொதிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் அவர்களது வாகனத்தில் எடுத்து வரப்படவிருக்கிறது

முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு க பராசசிங்கம் முல்லை மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

## ஐ. நாவின் அமைதிப்படை வளைகுடா செல்கிறது

ஈராக்-குவைத் எல்லையில் எதிர்காலத்தில் இராணுவ நடவடிக்கை ஏதும் ஏற்படாது தடுக்கும் முகமாக ஐ நாவின் அமைதிப்படை இன்று குவைத் செல்கிறது.

இந்த அமைதிப்படையில் 32 நாடுகளைச் சேர்ந்த 1400 அதிகாரிகள் இடம்பெறுகின்றனர். படைத் தளபதியாக ஒஸ்ரியா நாட்டைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் இராகிடே நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஆடைஇல்லாத புதிய பால்மா வளர்ந்தோருக்கென அறிமுகம்

லங்காமில்க்புட்ஸ்நிறுவனம் புதிய ஆடை இல்லாத பால் மா ஒன்றை அறிமுகப்படுத்தி, சந்தைப்படுத்தியுள்ளது.

லங்கா மில்க புட்ஸ் நிறுவனத்தின் 'லக்ஸ்பிறே' பால் மா குழந்தை, இளையோர் உணவாகப் பயன்படுகின்றது

ஆனால் புதிய ஆடை அகற்றப்பட்ட பால்மா வளர்ந்தவர்களின் சௌக்கிய நலனுக்குந்தது என அறிவிக்கப்பட்டது.

## வரலாறு கற்பித்தல் கருத்தரங்கு

பாடசாலைகளில் வரலாறு கற்பித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. (ப-11)

## தமிழ்த்தாத்தாவின் 'நாவலன் கோவை'

தமிழ்த்தாத்தா தென் புலோலியூர் கந்தமுருகேசனாரின் தமிழ் பொக்கிஷமான "நாவலன் கோவை" யை நூலுருவில் அச்சிட்டு வெளியிடுவதற்கான துரித நடவடிக்கைகளை புலோலி கந்தமுருகேசன்மன்றம் மேற்கொண்டுள்ளது, (15)

## பொதுக்கூட்டம்

## தை மாதம் வழங்கப்படவில்லை

கிளிநொச்சி பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரைக்கு தை மாதத்துக்குரிய பொருள்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

தை, மாசி, பங்குனி மாதங்களுக்குரிய உணவு முத்திரைகள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ப 6)

## காரைநகர்

### காரைநகரில்...

படையினரும் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது முழுமையான சேதவிபரங்கள் அறியப்படவில்லை.

இதேவேளை காரைநகர் கடற்பிரதேசத்தில் பாரிய யுத்தக் கப்பல்களினதும் விசைப் படகுகளினதும் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

நேற்றும் காரைநகருக்கான போக்குவரத்து இரண்டாவது நாளாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. (ப- 31)

### அகதிகளை...

ராலயம் ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை பேசாலையிலுள்ள ஐ நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலய பாதுகாப்பிலுள்ள அகதி முகாமை சுற்றி வளைத்து 35க்கு மேற்பட்ட ஆண்களை கைது செய்தனர். (74)

### திருமலையில்...

ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானோர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

### அன்னை...

அமைகின்றது.

பரீட்சை காலையும் மாலையும் நடைபெறும். வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி பல்வேறு விடயங்கள் சம்பந்தப்பட்ட பல வினாக்களை கொண்டது இவற்றுள் மாணவர்களின் சொந்தப்பிரதேசம் பற்றிய கேள்விகளும் அடங்குகின்றன.

இரண்டாவது பகுதி கட்டுரை வரைதல் சம்பந்தப்பட்டது. இதில் அன்னை பூபதி பற்றிய கட்டுரையும் வேறு ஒரு கட்டுரையும் மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும்.

இந்தப் பரீட்சையில் பதினேழாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். (71)

### வவுனியா...

குடியமரச் செல்கின்றனர்.

இப்பகுதிகளில் அடங்கிய

### அத்தியாவசிய

கிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநோயாளர் பகுதி மற்றும்பிரசவப்பகுதிகள் இதனால் சீரான முறையில் இயங்குவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

### இடம்பெயர்ந்தவர்...

முதற்கட்டமாக தென் இந்திய திருச்சபை பலாலி மூளாம் பகுதிகளான மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி வடக்கு,பலாலி மேற்கு,பலாலி வடக்கு கட்டுவன் மேற்கு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண அத்

போக்குவரத்து இரண்டாவது நாளாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. (ப- 31)

## ஆஸ்பத்திரி...

குறிப்பிட்டவர்களுக்கு அந்தந்த நிறுவனங்கள் மண்ணெண்ணெய் பெற்றுக் கொடுக்க உரிமை இருக்கின்ற பொழுது ஏன்? ஆஸ்பத்திரி நிர்வாகம் அவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இதனால் ஆஸ்பத்திரி ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (70)

னர்.

கைதானோர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் எதுவுமே அவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. (74)

## வவுனியாவில்...

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் நேற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகள் அங்கு செல்லவில்லை எனப் போக்குவரத்துப்பிரிவினர் தெரிவித்தனர். (ப 11)

## வவுனியா...

குடியமரச் செல்கின்றனர்.

இப்பகுதிகளில் கடந்த வாரத்தில் பலத்த மோதல்கள் இடம்பெற்றது தெரிந்ததே. (ப 11)

## மாந்தை...

இதேவேளை நானாட்டானில் இருந்து முருங்கன் பகுதியை நோக்கிச் சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் பாலசெட்டிப் பகுதியில் வைத்து தாக்குதல் நடாத்தினர். சேதவிவரம் தெரியவில்லை. (71)

## கவிதைப்...

ஆழ்வாருக்கோ "வையந்த கழியா, வார் கடலே நெய்யாக, வெய்யாக கதிரேசன் விளக்காகத் தோன்றும்.

(4) படிமம்

படிமத்தைக் கட்புலப்படிமமாகவோ செவிப்புலப் படிமமாகவோ கொண்டுவரலாம். கண்ணகி சபைக்கு வரும் கோலத்தை இளங்கோ கட்புலப் படிமமாகக் கொண்டுவருகிறார் என்றால்

"ஓம் ஓம் என்று சொல்லி உறுமிற்று வானம்" என்று கூறும் பாரதி அதைச் செவிப்புலப் படிமம் ஆக்குகிறான் எனலாம்.

5 குறியீடு

வெளியே சொல்லப்படும் பொருள் ஒன்றாக இருக்க, அதன் உள்ளீடாக வேறோர் ஆழமான பொருள் மறைந்து நிற்பது குறியீடு "நீங்களே இந்தப் பயிர்களின் வேலிகள் வேலிகள் பயிர்களைக் காவல் புரிவதே சட்ட நியதி"

என்று முருகையன் சொல்லும்போது பயிர்கள் மக்களுக்கும் வேலிகள் இராணுவத்துக்கும் குறியீடாகின்றன.

இத்தகைய கருவிகளுக்கு மேலாகப் பேச்சோசைப் பண்பும் நாடகப்பண்பும் கவிதைக்கு அழகு தரும். மகாகவியிடம் இவை இரண்டும் மேலோங்கி நின்றன "வாழைப் பழகுங்கள் வாத்தியார்" என்ற நீலாவணனின் கவிதை இப்பண்புகள் நிறைந்தது" என்று கூறி முடித்தார் சோ. ப. கவிஞர் அவர்கள் தான் சொல்ல நினைத்த விடயங்களை ஒழுங்குபடுத்தி ஆயத்தம் செய்து வந்தார் என்பது அவரது ஆற்றொழுக்குப் போன்ற தெளிவான பேச்சில் துல்லியமாகப் பளிச்சிட்டது. பா. மகாலிங்கசிவம் அவர்களின் நன்றியுரையுடன் முதல் நாள் நிகழ்வுகள் நிறைவுக்கு வந்தன. (தொடரும்)

களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நிவாரணம் வழங்கவுள்ளது

வாராந்த நிவாரணம் பெறுபவர்கள் இந்நிவாரணம் பெறும் தகுதியற்றவர்கள் நிவாரணம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் பங்கீட்டு அட்டைகள் தமது தகுதியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## நோயாளர்...

இதனால் சிற்றூழியர் இல்லாத நேரங்களில் ஆஸ்பத்திரிக்கு வரும் கடும் நோயாளிகள் பெரிதும் அவதிப்படுவதாகவும் சிற்றூழியர் வரும் வரை காத்திருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சில தினங்களுக்கு முன்னர் காரைநகரில் இருந்து காயத்துடன் வந்த ஒருவர் இவ்வாறு காத்திருந்ததாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ப- 11)

# காரைநகர் தற்காலிக தபாலகம்

காரைநகரில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை காரணமாக காரைநகர் தபாலகம் சுழிபுரம் தபால் நிலைய கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

காரைநகர்ப் பகுதி மக்கள் தமக்குரிய தபால்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## தமிழ்...

தென்பகுதி வங்கிகளில் இடம்பெற்றுள்ள ஊழியர் பற்றாக்குறையை இவர்கள் மூலம் வங்கித் தலைமையகம் நீக்கியுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

மீண்டும் இந்த ஊழியர்கள் யாழ்ப்பாணம் திரும்பாவிட்டால் இங்குள்ள வங்கிகளின் வேலைகள் தொடர்ந்தும் பாதிக்கப்படும் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன (ப- 11)

# பொதுக்கூட்டம்

இன்று வெள்ளிக்கிழமை பி. ப 2 மணிக்கு யாழ் பல. நோ. கூ சங்க கட்டிட மேல் மாடியில் ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில் முக்கியமான சில முடிவுகள் எடுக்க வேண்டியுள்ளதால் சகல ப. நோ கூ. சங்க பொதுமுகாமையாளர்களையும் தவறாது சமூகம் கொடுக்கும் படி யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

# விளையாட்டுப் போட்டி

விளையாட்டமைச்சினால் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. எம். தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன. (15)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 12-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.